# ஐயகோ... சாய்ந்தனையோ ஆலமரமே!



திராவிடச் சித்தாந்தத்தின் ஞானக் கருவூலமொன்று கருப்புத் திரைக்குள் முகமொளித்துக் கொண்டதே!

காலமெல்லாம் முரசொலிக்காய் ஓயாது உழைத்த அந்தப் பேரன்புப் பெட்டகம் இன்று ஈமக் கப்பலுக்குள் ஏறிவிட்டதே!

முத்தமிழறிஞரின் முரசொலிக்கு மூன்றாம் கண்ணாய் நின்ற அந்தப் பேரறிவு, சில்லிட்டு இருப்பதாய் சேதி வந்ததே ! ஐயகோ, எளியவன் மூளை எழுத மறுத்து மருகி மருகி மருண்டு மருண்டு செத்துச் செத்துப் பிழைக்கிறதே!

எழுது. எழுது என்று என்னை ஊக்கப்படுத்திய, தாயுள்ளம் சுமந்த அந்தப் பேரன்புக் குரல் என் செவிப்பறைகளெங்கும் முரசொலித்து மோதி மோதி விழிகளை கடலாக்குகிறதே! விரல்கள்நடுங்குகின்றதே! வேறேதும் பிடிக்கலையே!

வரி வரியாய் படித்து அதிகாலையிலும் அழைத்து வாழ்த்தும் அந்தத் தாயுள்ளம், இன்று சொல்லாமல் கொள்ளாமல் சுவனம் புகுந்து விட்டதே!

முன்தினம் கூட முரசொலியில் எழுதினாரே? ஏனிந்த அவசரமோ? எங்கிருந்து அழைப்போ ? முத்தமிழறிஞரின் முகம் பார்க்கும் பரபரப்போ?

சட்டம் படித்தவரே! சட்டமன்றக் கூண்டிலேற்றிய போதும் விரைத்து நின்ற திராவிடத் தீரரே ! எங்கள் மிக மூத்த வழிகாட்டியே ! பத்திரிக்கையுலகத்தின் வீட்டுமரே... பாசப் பெருந்தகையே.. அமையும் ஐயா, அமையும்! அமையும்!

தங்களை, தங்கள் அயராத அர்ப்பணிப்பை 'முரசொலி செல்வம்' என்னுமந்த பெருமரியாதைக்குரிய திருப்பெயரை இந்த திராவிடத் திருநாடு என்றென்றும் மறவாதிருக்கும்! தோன்றி வந்த ஆரூர் சோதிக்குள் அமையும் ஐயா, அமையும்! அமையும்!

தமிழாய்ந்த பெருமகனே, எங்களைப் போன்ற இளைஞர்களின் எழுத்தில் என்றும் நீங்கள் முரசொலித்து வாழ்வீர்கள் என்பது திண்ணம். பாரம் உமக்கில்லை. பால்வீதி கடந்து அமையும் ஐயா, அமையும்! அமையும்!

ஆன்மச் சிறகின் காலகாலமான மிதத்தலில், மரணம் என்பது அடுத்தகட்ட பயணம் மட்டுமே எனத் தேற்றிக் கொள்வதைத் தவிர எமக்கிங்கே வேறு வழியில்லை.

தாங்கள் எங்கள் மேல் பொழிந்த பேரன்பை இறுகப்பற்றியபடி நன்றியோடு இருகரம் கூப்பி நெஞ்சார வணங்குகிறோம்!

பேராளரே அமையும்!

தீதொன்று அணுகாத பேரமைதி அதற்குள், திராவிடத் திருவாய் சென்று அமையும் ஐயா.. அமையும் ! அமையும் !!

**ஶ்ரீராம் சர்மா**



---

புதுக்கோட்டையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்து

# ரூ.145.55 கோடியில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.ரகுபதி மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் நாட்டினர்!

புதுக்கோட்டை, அக்.11 -

புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மாமன்ற முதல் கூட்டத்தினை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 09.10.2024 அன்று துவக்கி வைத்து, பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மேயர் திலகவதி செந்தில் அவர்களுக்கு வெள்ளி செங்கோலினை வழங்கினார்கள்.

பின்னர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்கு தேவையான, குடிநீர் வசதி, மின்வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாநகராட்சி மாமன்ற முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, ரூ.145.55 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள புதை வடிகால், புதை வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய குடிநீர் திட்டம் மற்றும் புதிய பேருந்து நிலைய கட்டிடப் பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அந்த வகையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.18.90 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலைய கட்டிட பணியினையும் மற்றும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.101.34 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணியினையும் மற்றும் ரூ.25.31 கோடி மதிப்பீட்டில் 24 X 7 மணி நேரம் குடிநீர் வழங்கும் திட்டப் பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

இதில், பாதாள சாக்கடை அமைக்கும் திட்டமானது, 1, 2, 3, 4, 40, 41, 42 ஆகிய 7 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. மேலும் 8,101 வீட்டு இணைப்புகளுக்கும் இத்திட்டம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30,500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். மேலும், குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் 38, 39, 40, 41, 42 ஆகிய 5 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. இதில் 3,850 குடிநீர் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 22,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். இப்பணிகள் அனைத்தையும் தரமாகவும்,

விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்புமிக்க திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார். பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி மாமன்ற முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, ரூ.145.55 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த வகையில், புதிய

பேருந்து நிலையம் கட்டுவதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறின்றி பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் சென்றுவர முடியும். மேலும், பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் கழிவு நீர் கால்வாய்களில் வழிந்தோடி சாலைகளில் கழிவு நீர் தேங்காமல் இருக்கும். குடிநீர் வழங்கும் திட்டம் பயன்பாட்டிற்கு வரும் பட்சத்தில் அப்பகுதி பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் சீரான குடிநீர் வழங்கப்படும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படும்.

எனவே, பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றி வரும் தமிழக அரசின் திட்டங்களை தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்து ராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக் கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தானமூர்த்தி, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச் செல்வன், புதுக்கோட்டை மாநக ராட்சி ஆணையர் த.நாராயணன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுவிச்சுடர் இராசு. கவிதைப்பித்தன், புதுக் கோட்டை மாநகர செயலாளர் ஆசெந்தில், மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் க.முகமது இப்ராஹிம், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) காளியப்பன், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த த.சந்திரசேகரன், தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் பெ. தெய்வானை, அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




சென்னை தெற்கு மாவட்டம் – வேளச்சேரி மேற்குப் பகுதி 176 வது வட்ட திமுக சார்பில் கழக 75 ஆம் ஆண்டு பவள விழா முப்பெரும் விழா விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டக் கழக செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில் நடைபெற்றது. இதில் வேளச்சேரி மேற்கு பகுதி கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், மாமன்ற உறுப்பினர்கள் பெ.மணி மாறன், வே.ஆனந்தம், எஸ்.பாஸ்கரன், மு.மகேஸ்வரி முருகவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத், மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி பிரபாகராஜா எம்.எல்.ஏ., மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, நிர்வாகிகள், வட்டச் செயாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணகிளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம் – கம்பம் ஒன்றியம் க.புதுப்பட்டி பேரூர் கே.எல்.எஸ்.எஸ். அரசு மேல்நிலைப் பள்ளியில் தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மாணவ – மாணவியர்க்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், கம்பம் ஒன்றியச் செயலாளர் தங்கபாண்டியன், புதுப்பட்டி பேரூர்ச் செயலாளர் எம்.டி.எம்.பார்த்திபன், கே.எம்.பி.எல். ரவி, கே.எல்.எஸ். எஸ்.கே.ரவி, ரவிச்சந்திரன், சிவாஜி, மோகன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

---



சென்னை மாநகராட்சி இரண்டாவது மண்டலம் மணலி காமராஜர் சாலையில் தீயணைப்பு நிலையம் ரூபாய் ஐந்து கோடி மதிப்பீட்டில் மூன்று அடுக்கு கட்டிடம் கட்டப்பட்டு அதற்கான திறப்பு விழா தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக திறந்து வைத்தார் அப்போது மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் .சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவர் ஏ .வி. ஆறுமுகம், ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக செயலாளர்கள் வ. முத்துசாமி, சாலை டி. கணேசன், கேபிள் கணேசன், சி.எம்.பாபு, தினகரன், கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், ஞான மூர்த்தி, பலராமன், சுமித்ரா, ஆனந்தி, ஜெயா, பிச்சாண்டி, மகேந்திரன், வெற்றிவேல், கிரி, மற்றும் போலீஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

கலைஞர் செய்திகள் – தலைமை செய்தி ஆசிரியர்

# ப.திருமாவேலன் தாயார் மறைவு!

## கழகத்தினர் – தமிழறிஞர்கள் அஞ்சலி!

சென்னை, அக்.11-

மு.படிக்கராமு அவர்களின் துணைவியாரும், ப.வேல்மணி இணை பேராசிரியை ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி மற்றும் திருமாவேலன் (தலைமை செய்தி ஆசிரியர், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி சென்னை) ஆகியோரின் தாயாருமான ப.முத்துலக்குமி அவர்கள் நேற்று (10-10-2024), காலை 7:30 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (11-10-2024) வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் 31, ராம் நகர், ரோஸ் மேரி பள்ளி அருகில், மகாராஜா நகர், பாளையங்கோட்டை இல்லத்தில் நடைபெறுகிறது.



இச்செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தமிழறிஞர்கள், அன்னாரின் இல்லம் சென்று மறைந்த ப.முத்துலக்குமி அம்மையார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

---



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டம், புல்லா அவென்யூ செனாய் நகரில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவிகளுக்கு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் தமிழக அரசின் விலையில்லா 312 மிதிவண்டிகளை வழங்கினார். உடன் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், உதவி கல்வி அலுவலர் கே.தணிகைவேல், தலைமை ஆசிரியர் என்.சின்ன வள்ளி தாய், உதவி பொறியாளர் சுரேஷ்பாபு, 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் 101, 101 (அ) வது வட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி
### அக்டோபர் 11 (2002)



**இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**